# ஆண்டவருடைய பிறப்பின் அறிவிப்பு பெருவிழா

## முன்னுரை

தவக்காலத்தில் வரும் மற்றொரு முக்கியமான பெருவிழா, இன்றைய மங்கள வார்த்தைத் திருவிழா.

இயேசு கிறிஸ்துவின் மனித பிறப்பு பற்றிய, மங்களச் செய்தியை, கபிரியேல் தூதர் மூலம் முன்குறிக்கப்பட்ட, கன்னியான மரியாளிடம் தெரிவிக்கப்பட்ட கொண்டாட்ட நிகழ்வு, இன்றைய நாளின் சிறப்பு.

மானுடம் சிறப்புற, மனிதம் மலர, கடவுளின் மகன் தன்நிலையை விடுத்து, பலவீனமான, பாவ நிலையான மனிதகுலத்தின் நிலையேற்று, தன் வல்லமையினால் நம் வலுவின்மையை போக்கிட முன்வந்த கொண்டடாட்ட நிகழ்வு.

இதற்காக அவர் முன்குறித்தவர் தான் கன்னி மரியாள். எளிய வாழ்வு, மிக சாதாரண பெண்ணாக இருந்தவர்கள், தேர்வு செய்யப்பட்டு, அதற்கான செய்தியை பகிரும் போது, பதற்றம் கொண்டு நானோ கணவனை அறியேனே? என்ற போது, தூய ஆவியின் வல்லமை உம்மிலே சிறந்தோங்கும் என்றவுடனே, இதோ உமது அடிமை என்று சொல்லி தன்னை தாழ்த்துகின்றார், ஏற்றுக் கொண்டார்.

ஆவியின் வல்லமையை உணர்ந்து ஏற்றுக் கொண்டவர்களாக, நாமும் பலியிலே பங்கேற்று செபிப்போம்.

## மன்றாட்டு

திருஅவையையும், அதன் பொறுப்பாளர்களையும் உம் ஆவியின் அருட்கொடையால் ஆசீர்வதித்து, வல்லமையை அறிந்தவர்களாக, பொறுப்புடனே திருஅவையை முன்னெடுத்து செல்ல அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

நாட்டின் தலைவர்களையும், தற்போது அவர்களை தேர்வு செய்த பொது மக்களையும், ஆவியின் அருளால் ஆசீர்வதித்து, நல்ல தலைவர்களாக முன்னெடுத்து செல்ல, அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

பலியிலே பங்கேற்கும் நாங்கள் எங்களது அன்றாட வாழ்விலே, இறைத்திருவுளம் அறிந்து செயலாற்ற, அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

மற்றவர்களோடு உறவு கொள்ளும் நரங்கள், இறைத் தூதர்களாக இருந்து, வாழ்வு தரும் மங்களச் செய்தியினை பரிமாறி, அவர்களை மகிழ்விக்க, அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.